திரு. எம். எம். ஏ. ரசாக் : பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையங்களில் இருக்கின்ற எல்லா கழிப்பிடங்களும் அசுத்தமாக இருக்கின்றன. ஆகவே கழிப்பிடங்களை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஏதாவது கட்டணம் வசூலித்து, அவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : எல்லா பேருந்து நிலையங்களிலும் உள்ள கழிப்பிடங்கள் அசுத்தமாக இருக்கின்றன என்ற கருத்தை ஏற்க முடியாது. எங்கெங்கு இப்படியிருக்கிறது என்று குறிப்பிட்டு தெரிவித்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம்.

அரியலூர் ஊராட்சி.

*649 வினா—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அரியலூர் பஞ்சாயத்தை முனிசிபாலிட்டியாக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ஐந்து லட்சம் வருமானம் உள்ள பெரிய நகராட்சிகள்கூட நிர்வாகத்தை சரியாக நடத்த முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இரண்டு லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றலாம் என்பது முறையாகாது. ஆகவே, ஐந்து லட்சத்திற்குக் குறைவாக இருக்கின்ற பேரூராட்சிகளை நகராட்சியாக மாற்றாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படி ஒட்டு மொத்தமாகச் செய்ய இயலாது. குறிப்பிட்ட பேரூராட்சிகளில் இருக்கின்ற நிலைமையைப்பற்றி தெரிவித்தால் அதைப்பற்றி அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும்.

திரு. த. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் பேரூராட்சி மன்றம் இதற்காகத் தீர்மானம் போட்டு, நிறைவேற்றி, அதை கோட்ட வளர்ச்சி அதிகாரியும், மாவட்ட ஆட்சித்தலைவரும் நகராட்சியாக மாற்றுவதற்கு இதற்கு தகுதி இருக்கிறது என்று தீர்மானத்தை இங்கு அனுப்பியிருக்கிறார்கள். எந்த ஆண்டில் நகராட்சியாக மாற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

1978 மார்ச் 21]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரியலூர் ஊராட்சியை 3-ம் தர நகராட்சியாக மாற்றலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுபற்றி ஊரக வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை வந்த பிறகு அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும்.

[முற்பகல் 9-30.]

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, என்னுடைய ஊராட்சியான திருவத்திபுரம் பேரூராட்சி 20,000 ஜனத் தொகை கொண்டதாகவும், 2 லிருந்து 3 லட்சம் வரை வருவாய் வரக்கூடிய பேரூராட்சியாகவும் இருக்கின்றது. அதை நகராட்சியாக மாற்றவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு புலவர் அவர்களுடைய கருத்து ஆராயப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் நகராட்சியாக உயர்த்தப்படுவதால், பொதுவாக அங்குள்ள பொது மக்கள் சொத்து வரி உயர்த்தப்படும் என்று பயப்படுகிறார்கள். இப்படி நகராட்சியாக உயர்த்தப்படுகின்ற நேரத்தில், முதல் ஐந்தாண்டு காலத்திற்காவது சொத்து வரியை உயர்த்துவதில்லை என்று அரசாங்கம் முன்வருவதோடு, அதற்கான பணிகளை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று அந்தப் பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. மாவட்ட ஆட்சியாளரும் அதை அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அது நகராட்சியாக மாற்றப்பட வேண்டும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லும்போது எல்லா நகராட்சிகளுக்கும் உரிய விதிமுறை இதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சொ. ந. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிகளை நகராட்சிகளாக மாற்றுவது என்பது மக்கள் அடிப்படையிலே மாற்றப்படுகின்றதா அல்லது வருமான அடிப்படையிலே மாற்றப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இரண்டின் அடிப்படையிலுமே மாற்றப்படுகின்றது.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி பேரூராட்சியை நகராட்சியாக ஆக்கும் திட்டம் உண்டா ? அதைப்போல் இந்த மாநில

[1978 மார்ச் 21

அரசைப் பொறுத்தவரையில், எத்தனை பேரூராட்சிகளை நகராட்சிகளாக ஆக்கியிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஏற்கனவே பதில் அளிக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால் ஒட்டு மொத்தமாக தெரிவிக்கின்ற அளவுக்கு இப்போது என்னிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்குப் பதில் கொடுக்கலாம்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, புதிய அரசு பொறுப்பேற்ற பின்னாலே, எத்தனை பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன? அதைப்போல் எத்தனை நகராட்சிகள் பேரூராட்சிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுராந்தகத்தை நினைவிலே வைத்துக்கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்கிறார் என்று நினைக்கிறேன். தனியாகக் கேள்வி போட்டால், விவரங்கள் தெரிவிக்கலாம்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் திட்டம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அல்லது அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சென்னை நகராட்சியிலிருந்து இப்போதுதான் வெளியே வந்திருக்கிறீர்கள். தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரம் சொல்லலாம்.

ஸ்தாபன ரீதியில்லாத தொழிலாளர்கள்.

*650 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பீடி தொழிலாளர் மற்றும் ஸ்தாபன ரீதியாக அல்லாத தொழிலாளர்கள் வாழ்க்கை நிலையை பரிசீலனை செய்ய அமைக்கப்பட்ட குழு அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதா?

(ஆ) அந்தக் கமிட்டியின் சிபாரிசுகளை தமிழக அரசு பரிசீலித்ததா ?

(இ) அவைகளை அமுல் நடத்துவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?